தோராயிரத்து தொளாயிரத்து முப்பத்தேழு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 11,21,937.21) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1615 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 11,21,937.21 கொண்ட பணத்தொகையை, 2008 நவெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹாநாமவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அம்பதலன் பஹல அளுத் குறுகோறளை தெற்கில் உள்ள, கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வென்னவத்த பிராண்டியாவத்த வீதியின் 43/18 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள மீகஹஓவிற்றவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. கே. ஜே. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 1995, ஏப்பிறல் 1 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 758 இல காட்டப்பட்டள்ளதுமான காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் வடக்கு : மீகஹவத்தயின் பகுதி ; கிழக்கு : வீதி (12 - 13 அடி அகலமானது) ; தெற்கு : மீகஹஓவிற்ற கும்புர ; மேற்கு : மீகஹவத்தயின் பகுதி. அத்துடன் கொழும்பு காணிப் பதிவகத்தில் 1012 /179 இல் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 758 வரைபடத்தின் பிரகாரம் பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-341/8

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(மாளிகாவத்தை கிளை) - றணசிங்க கங்காணமலாகே விக்ரர் றணசிங்க

ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2008, ஏப்பிறல் 24 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன் றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட் டது :-

''றணசிங்க கங்காணமலாகே விக்ரர் றணசிங்க என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எல். ஏ. டி. குணதிலக என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஒற்றோபர் 4 ஆந் திகதிய 1415 ஆம் இலக்க முறி, மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2007, திசெம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது பதினொரு இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஒரு ரூபா மூன்று சதம் (ரூ. 11,99,791.03) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1415 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 11,99,791.03 கொண்ட பணத்தொகையை, 2008, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹாநாமவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோரளையின் தாசியப்பற்றுவில் மினுவாங்கொடை பிரதேச சபையின் உடுகம்பொல உப அலுவலக எல்லைகளுக்குள் உடுகம்பொல கிராமத்தில் அமைந்துள்ளதும், கஹட்டகஹலந்த மற்றும் தவட்டகஹலந்த கெபெல்ல என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. பி. டி. ஜே. திஸ்ஸநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, யூன் 13 ஆந் திகதிய 2158A என்னும் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 18 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரை யறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், அதிலுள்ள கட்டிடங்கள் மற்றுமெல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 19 ; கிழக்கு : நிமால் குணவர்தன என்பவரின் காணி ; தெற்கு : காணித்துணடு 17 அத்துடன் ; மேற்கு : காணித்துண்டு 21. அத்துடன் கம்பஹா காணிப் பதிவகத்தில் A 238/126 என்னும் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 2158A என்னும் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பதினைந்து தசம் சைபர் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.06) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோரளையின் தாசியப்பற்றுவில் மினுவாங்கொடை பிரதேச சபையின் உடுகம்பொல உப அலுவலக எல்லைகளுக்குள் உடுகம்பொல கிராமத்தில் அமைந்துள்ளதும், கஹட்டகஹலந்த மற்றும் தவட்டகஹலந்த கெபெல்ல என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. பி. டி. ஜே. திஸ்ஸநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, யூன் 13 ஆந் திகதிய 2158A என்னும் இலக்க

வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 19 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், அதிலுள்ள கட்டிடங்கள் மற்றுமெல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பபட்ட காணித்துண்டு 19 இன் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 20 மற்றும சி. கருணாசேகர என்பவரின் காணிகள் ; கிழக்கு : சி. கருணாசேகர மற்றும் நிமால் குணவர்தன என்போரின் காணிகள் ; தெற்கு : காணித்துணடு 18 மற்றும் ; மேற்கு : காணித்துண்டு 21. அத்துடன் கம்பஹா காணிப் பதிவகத்தில் A 238/127 என்னும் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 2158A என்னும் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பதினைந்து தசம் சைபர் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.06) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. பி. டி. ஜே. திஸ்ஸநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998, செத்தெம்பர் 14 ஆந் திகதிய 2158A என்னும் இலக்க வரைபடத்தில் காட்டப்படடுள்ள காணித்துண்டு 19 என அடையாளமிடப்பட்டுள்ள வீதிக்கான ஒதுக்குகையின் மீதும் அதன் வழியாகவும் உள்ள பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-341/9

---

### பேன் ஏசியா பாங்கிங் கூட்டுத்தாபனம் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்

(பம்பலப்பிட்டி கிளை) - வாடிக்கையாளரின் பெயர் : ஹெஸ்ஸோநைட் புறொப்பர்ட்டி டெவலொப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

2009.01.28 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா பாங்கிங் கூட்டுத்தாபனம் பீஎல்சீ பணிப்பாளர்களது கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வரும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

"முன்னர் ஹெஸ்ஸோநைட் என்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்" என அழைக்கப்படும் "ஹெஸ்ஸோநைட் புறொப்பர்ட்டி டெவலப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், முன்னர் வரையறுக்கப்பட்ட பான் ஏசியா வங்கி மற்றும் பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட பதிவு இல. பீகியு 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, பெப்புருவரி 01 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1947 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாராதலாலும் ; பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேலைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு பண முதல் கணக்கின் மீது அறுபத்து நான்கு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து எழுநூற்று முப்பது ரூபா நாற்பது சதம் (ரூ. 64,86,730.40) கொண்ட தொகை மற்றும் 2009.01.15 ஆந் திகதி வரையான வட்டி அத்துடன் அறுபத்துநான்கு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று எழுபத்தாறு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 64,77,776.79) கொண்ட தொகை மீது 2009.01.16 ஆந் திகதியிலிருந்து சொல்லப்பட்ட முறிமீதான கொடுப்பனவு திகதி வரை ஆண்டிற்கு 30% வட்டியுடனும் தற்போது வரவேண்டியும் உரியதாகவு முள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இல. 1947 இன் மீது வரவேண்டியுள்ள சொல்லப்பட்ட தொகை அறுபத்து நான்கு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து எழுநூற்று முப்பது ரூபா நாற்பது சதம் (ரூ. 64,86,730.40) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் அத்துடன் 2009.01.16 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான மேற்கூறப்பட்டவாறான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள, வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவு பிரகாரம் கோட்டே, பிட்டகோட்டே, 474, மஹநாம டிரைவ், "ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்" இன் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. இரஞ்சித்த எஸ். மஹநாம அவர்களுக்கு, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிகாரம் அதிகாரமும் தத்துவமும் அளிக்கப்படுகிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, தெஹிவளை-கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லைகளுக்குள் தெஹிவளையில் அமைந்துள்ளதும் வெண்டர்வேர்ட் பிளேஸ், தற்போதைய வரிமதிப்பு இல. 31 ஐக் கொண்டதும் "அப்போது கெரியவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். கே. மஹிந்த அவர்களால் தயாரிக்கப்பட்டு 1998.09.29 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 374 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 3800 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கடடிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 3800 இன் எல்லைகளாவன - வடக்கு: வொண்டர்வேர்ட் பிளேஸ் (வீதி) ; கிழக்கு : வொண்டர்வேர்ட் பிளேஸ், வரிமதிப்ப இல 29 ஐக் கொண்ட துண்டு 1ஈஏ ; தெற்கு : முறையே வின்சர் அவெனியு வரிமதிப்பு இல. 33/1 மற்றும் 8 ஐக் கொண்ட துண்டு 1ஜீ 3 ; மேற்கு : வொண்டர்வேர்ட் பிளேஸ், வரிமதிப்பு இல. 33 ஐக் கொண்ட துண்டு 2466 மற்றும் வின்ட்சர் அவெனியு, வரிமதிப்பு இல. 33ஏ ஐக் கொண்ட துண்டு 3494 மற்றும் துண்டு 3495. இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 374 இற்கமைய இருபது தசம் ஒன்று ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20.17பே.) விஸ்தீரணமுடையது. கல்கிஸ்ஸை காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் தெஹிவளை 82/216 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரஞ்சித் பெரேரா,
சிரேஷ்ட முகாமையாளர் - அறவிடுதல்கள்.

3-340/3

## பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் (பீஎல்சீ)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கொட்டாஞ்சேனை கிளை) - வாடிக்கையாளரின் பெயர் : ''எஸ். ஏ. எஸ். மோட்டர்ஸ்'' பங்குதாரர்கள்

2008.09.24 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபை கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வரும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

''எஸ். ஏ. எஸ். மோட்டர்ஸ்'' பங்குதாரர்கள் மொஹமட் ஸெக்கரியா ஸிஹானா அஸ்மி மற்றும் மொஹமட் லெப்பே ஸஹுருவான் பீபீ ஆகியோர், முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட பதிவு இல. பீகியு 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, நவெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1146 மற்றும் 2005.11.16 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 881 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலா லும் ; பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும்) இதற்கு (i) பண முதல் கணக்கின் மீது ஐம்பத்தேழு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐநூற்று தொண்ணூறு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 57,37,590.65) கொண்ட தொகை மற்றும் 2008.08.05 ஆந் திகதி வரையான வட்டி அத்துடன் ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 50,00,000) இற்கு 2008.08.06 ஆந் திகதி சொல்லப்பட்ட முறியின்மீதான கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டிற்கு 29% வட்டி மற்றும் (ii) பத்து இலட்சத்து இருபத்து மூவாயிரத்து எண்ணூற்று இருபது ரூபா எழுபத்து இரண்டு சதம் (ரூ. 10,23,820.72) கொண்ட தொகை அத்துடன் பத்து இலட்சத்து இருபத்து மூன்று ஆயிரத்து எண்ணூற்று இருபது ரூபா எழுபத்திரண்டு சதம் (ரூ. 10,23,820.72) கொண்ட தொகை மீது 2008.09.01 ஆந் திகதியிலிருந்து சொல்லப்பட்ட முறிகள் மீதான கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டிற்கு 38% வட்டியுடனும் சேர்த்து தற்போது வரவேண்டியும் உரியதாகவும் உள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 881 மற்றும் 1146 இன் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை அறுபத்தேழு இலட்சத்து அறுபத்தோராயிரத்து நாநூற்று பதினொரு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 67,61,411.37) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் அத்துடன் சொல்லப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான மேற்கூறப்பட்டவாறான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள, வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கோட்டே, பெத்தகான வீதி, 134 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் பீ. கே. ஈ. சேனாபதி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் வழங்கப்படுகிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், வத்தளை-மாபோலை மாநகர சபை எல்லைகளுக்குள் மாபோலை, நீர்கொழும்பு வீதி வழியே அமைந்துள்ளதும் நீர்கொழும்பு வீதி, வரிமதிப்பு இல. 684 ஐக் கொண்டதும் ''தெல்கஹகும்புற'' அல்லது ''சீலாவைச்சிவிகே கும்புற'' மற்றும் ''தெல்கஹவத்த'' என அழைக்கப்பட்ட காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். இராசப்பா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005.07.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 261/2005 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சிங்கநாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1962.03.10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 611 இல் குறிப்பிடப்பட்ட துண்டுகள் ஏ மற்றும் பி இன் பாகத்தின் கூட்டிணைப்பாகவும் ஒரு மீள் நிலஅளவையாகவும் இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன - வடக்கு: தூவவத்தை வீதி (பொது வீதி) ; கிழக்கு : நீர்கொழும்பு வீதி, வரிமதிப்பு இல. 706 ஐக் கொண்ட வளவுகள் ; தெற்கு : நீர்கொழும்பு வீதி, வரிமதிப்பு இல. 704 ; மேற்கு : நீர்கொழும்பு வீதி இது ஒன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0று. 9.25பே.) விஸ்தீரணமுடையது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரஞ்சித் பெரேரா,
சிரேஷ்ட முகாமையாளர் - அறவிடுதல்கள்.

3-340/7

---

## பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் (பீஎல்சீ)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்*

(கிருலப்பனை கிளை) - வாடிக்கையாளரின் பெயர் : உபாலி இரத்நாயக்க மற்றும் வினிதா காந்தி செனரத் இரத்நாயக்க

2009.01.28 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் பணிப்பாளர்கள் சபைக் கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வரும் தீர்மானம் தீர்மானிக் கப்பட்டது.

''கடப்பாடுடையவர்களான உபாலி இரத்நாயக்க மற்றும் வினிதா காந்தி செனரத் இரத்நாயக்க ஆகியோர், முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட பதிவு இல. பிகியு 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு நளினி கணேஷயோகன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, நவெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1729 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவறியுள்ளார்களாதலாலும் ; பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேலைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு பண முதல்

கணக்கின் மீது முப்பத்தொன்பது இலட்சத்து இரண்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தேழு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 39,02,847.65) கொண்ட தொகையும் 2008, திசெம்பர் 31 ஆந் திகதிவரை வட்டியும் முப்பத்தைந்து இலட்சத்து தொண்ணூற்றைந்து ஆயிரத்து முந்நூற்றுறெண்பத்தொன்பது ரூபா முப்பத்திரண்டு சதம் கொண்ட தொகை மீது 2009, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து சொல்லப்பட்ட முறிகள் மீதான கொடுப்பனவு திகதி வரை ஆண்டிற்கு 29% வட்டியுடனும் சேர்த்து தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இல. 1729 இன் வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை முப்பத்தொன்பது இலட்சத்து இரண்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தேழு ரூபா அறுபத்தைந்து சதத்தை (ரூ. 39,02,847.65) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய பணங்கள் மற்றும் செலவுகள் அத்துடன் 2009, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள, வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்ய கோட்டே, பிட்டகோட்டே, 474, மஹாநாம டிரைவ், ''ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்'' இன் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. இரஞ்சித்த எஸ். மஹநாம அவர்களுக்கு, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிகாரம் அதிகாரமும் தத்துவமும் அளிக்கப்படுகிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (கொழும்பு பதிவு எல்லைகளுக்குள்), பியகம கிராம சபை எல்லைகளுக்குள்) சியனே கோறளை, அதிகாரி பற்று, கோனவலவில் அமைந்துள்ளதும் ''கொன்கஹவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர், எஸ். லோகநாதன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997.03.16 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2072 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு ஏ இன் எல்லைகளாவன - வடக்கு : வில்மன் சிங்ஹவின் ஆதனம் ; கிழக்கு : துண்டுகள் பி மற்றும் சீ ; தெற்கு : காலஞ்சென்ற எம். எல். பெரேராவின் ஆதனம் ; மேற்கு : திருமதி சமரக்கோனின் ஆதனம். இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 2072 இற்கமைய இருபது தசம் ஐந்து சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20.50பே.) விஸ்தீரணமுடையது. கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு சீ 412/178 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 2072 இல் துண்டு சீ என அடையாளமிடப்பட்ட பத்து (10) அடி அகல வீதி ஒதுக்கின் கீழும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து. கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு சீ 412/180 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இரஞ்சித் பெரேரா,
சிரேஷ்ட முகாமையாளர் - அறவீடுகள்.

3-340/6

### பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(உலக வர்த்தக நிலைய கிளை) - வாடிக்கையாளரின் பெயர் : ''வயம்ப ரிரேடர்ஸ்'' இன் பங்குதாரர்கள்

2008.12.17 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபை கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''ஈடுவைத்தவரான ஷாஹுல் ஹமீட் சாதிக்கின் மற்றும் கடப்பாடுடையவர்களான ''வயம்ப ரிடேர்ஸ்'' இன் பங்குதாரர்களான ஷாஹுல் ஹமீட் சாதிக்கீன் மற்றும் சேது அப்துல் காதர் வஹிதா ரஹுமான் ஆகியோர், முன்னர் வரையறுக்கப்பட்ட பான் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட பதிவு இல. பிகியு 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. பீ. பீ. பள்ளியகுருகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, யூன் 29 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 129, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஐ. சமரசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2003, ஒற்றோபர் 23 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1386 கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. வீ. எகொடகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1999, ஏப்பிறல் 16 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 24 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எம். புவார்ட் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1996, திசெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட ஈடடு முறி இல. 2483 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும் ; (இதனகத்துப் பின்னர் சிலவேலைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும் பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ இற்கு பண முதல் கணக்கின் மீது மூன்று கோடி நாற்பத்தெட்டு இலட்சத்து இருபத்தேழாயிரத்து நூற்று எழுபத்து மூன்று ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 3,48,27,173.37) கொண்ட தொகை மற்றும் 2008, நவெம்பர் 30 ஆந் திகதிவரை வட்டி அத்துடன் 2008, திசெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து சொல்லப்பட்ட முறிகள் மீதான கொடுப்பனவு திகதி வரை,

(i) அறுபத்து மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 63,25,000) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு 22% வட்டியுடனும் ; (ii) இருபத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 25,00,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு 22% வட்டியுடனும் ; (iii) இருபத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 25,00,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு 22% வட்டியுடனும் ; (iv) முப்பத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 35,00,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு 22% வட்டியுடனும் ; (v) ஒன்பது இலட்சத்து அறுபத்திரண்டாயிரம் ரூபா (ரூ. 9,62,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு 22% வட்டியுடனும் (vi) ஒரு கோடி பதனைந்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து முப்பத்து மூன்று ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 1,15,44,033.25) கொண்ட தொகைமீது ஐம்பது இலட்சம் ரூபா வரை ஆண்டிற்கு 22.5% வட்டி மற்றும் சொல்லப்பட்ட ஐம்பது இலட்சம் ரூபாவிற்கு (ரூ. 50,00,000) எல்லைக்கு மேல் ஆண்டிற்கு 38% வட்டியுடனும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறிகள் மூலம் வரவேண்டிய சொல்லப்பட்ட தொகையான மூன்று கோடி நாற்பத்தெட்டு இலட்சத்து இருபத்தேழாயிரத்து நூற்று எழுபத்து மூன்று ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 3,48,27,173.37) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் அத்துடன் 2008.12.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள இரண்டாம் அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள, சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 1386 மற்றும் 129 மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகள் அத்துடன் சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 2483 மற்றும் 24 மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள, இத்துடனுள்ள முதலாவது அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகள் ஆகியன பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கோட்டே, பெத்தகான வீதி, இல. 134 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கப்படுகிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளேபற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் வட்டார இல. 17 - அளுத்கடை மேற்கு, பீர் சாய்பு தெருவில் அமைந்துள்ளதும் பீர் சாய்பூ தெரு, வரிமதிப்பு இல. 86 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். கனகரட்னம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1996.11.21 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 6685 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து, சொல்லப்பட்ட துண்டு ஏ இன் எல்லைகளாவன - வடக்கு : பீர் சாய்பூ வீதி, வரிமதிப்பு இலக்கங்கள் தோட்டம்,90, 90/1 இலிருந்து 90/7 வரை அத்துடன் பழைய சோனகத் தெரு, வரிமதிப்பு இலக்கங்கள் 202, 204 மற்றும் 206 அத்துடன் ஹல்ட்ஸ்ரோப் தெரு, வரிமதிப்பு இல. 62 ; கிழக்கு : ஹல்ட்ஸ்ரோப் தெரு, வரி மதிப்பு இலக்கங்கள் 62 மற்றும் 64; தெற்கு : பீர் சாய்பூ தெரு, வரிமதிப்பு இல. 84 மற்றும் ஹல்ட்ஸ்ரோப் தெரு, வரிமதிப்பு இல. 64; மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ரெக்ஸ் பொன்சேக்கா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1993.07.21 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2100 இல் துண்டு 1 மற்றும் துண்டு 7ஏ. இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 6685 இற்கமைய பதினைந்து தசம் சைபர் ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.07பே.) விஸ்தீரணமுடையது ; கொழும்பு காணி பதிவகத்தில் ஏ868/236 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 6685 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 7ஏ என அடையாளமிடப்பட்ட வீதி ஒதுக்குடன் சேர்த்து.

### இரண்டாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் முன்னர் மாளிகாகந்த வட்டாரம், குப்பியாவத்தை, கிழக்கில் அமைந்துள்ளதும், மாளிகாகந்த வீதி, வைட் பார்க், வரிமதிப்பு இல. 1 (பகுதி) ஐக் கொண்டதும் துண்டு 2 (அரச காணி வரைபடங்களில் சொல்லப்பட்ட இரண்டு காணித்துண்டுகளுக்கிடையில் காணியாகவும் 1947, மாச்சு 8 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட அரச காணி வரைபடம் இல. 4 இல் துண்டு 1 மற்றும் அரச காணி வரைபடம் இல. 3 இல் துண்டு 1 இன் உப பிரிவாகவும் ஒன்றிணைப்பாகவும் இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து, சொல்லப்பட்ட துண்டு 2 இன் எல்லைகளாவன - வடக்கு : துண்டு 3; கிழக்கு : வைட் பார்க், வரிமதிப்பு இல. 1 இன் எஞ்சிய பாகம்; தெற்கு : துண்டு 1 ; மேற்கு : துண்டு 13. இது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சீ. எல். சீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, ஓகத்து 3 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 96 இற்கமைய எட்டு தசம் சைபர் இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.02பே.) அல்லது சைபர் தசம் சைபர் இரண்டு சைவர் மூன்று ஹெக்டேயர் ( 0.0203 ஹெக்.) விஸ்தீரணமுடையது ; கொழும்பு மாவட்ட காணி பதிவகம் ஏ 785/195 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மைய நிலஅளவை படத்தின் மூலம் சொல்லப்பட்ட வரைபடம் இல. 96 இல் சொல்லப்பட்ட துண்டு 2 பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபையினுள் முன்னர் மாளிகாகந்த வட்டாரம், குப்பியாவத்தை கிழக்கில் அமைந்துள்ளதும் மாளிகாகந்த வீதி (ஹைட் பார்க்), வரிமதிப்பு இல. 181/25 ஐத் தற்போது கொண்டதும் வைட் பார்க் (மாளிகாகந்த வீதி) வரிமதிப்பீட்டு இல. 1 (பாகம்) முன்னர் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சீ. எல். சீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1994, ஓகத்து 24 திகதியிடப்பட்ட வரைபட இல. 61/94 இல் துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சீ. எல். சீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, ஓகத்து 3 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 96 இல் துண்டு 3 ; கிழக்கு : வைட் பார்க், வரிமதிப்பு இல. 1 இன் பாகம் ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சீ. எல். சீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, ஓகத்து 3 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 96 இல் துண்டு 1; மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சீ. எல். சீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, ஓகத்து 3 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 96 இல் துண்டு 13. இது சொல்லப்பட்ட வரைபடம் இல. என் 61/94 இற்கமைய எட்டு தசம் சைவர் இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.02பே.) அல்லது ( 0.0203 ஹெக்.) விஸ்தீரணமுடையது ;

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். சீ. எல். சீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, ஓகத்து 3 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 96 இல் துண்டு 13 இன் மீதான வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இரஞ்சித் பெரேரா,
சிரேட்ட முகாமையாளர் - அறவீடுகள்.

3-340/4

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நுவரேலியா கிளை) - ரோஷன் ஸ்ரீபால் பீரிஸ் மற்றும் நிரோஷா சஜீவனி பீரிஸ் கன்னிப் பெயர் சமரநாயக்க

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, சனவரி 22 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" ரோஷன் ஸ்ரீபால் பீரிஸ் மற்றும் நிரோஷா சஜீவனி பீரிஸ் கன்னிப்பெயர் சமரநாயக்க கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில் கண்டி பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, சனவரி 24 ஆந் திகதியிடப்பட்ட 1055 இலக்க முறி, மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2008, யூன் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது இருபத்து ஏழு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு ரூபா தொண்ணூற்று எட்டு சதம் (ரூ. 27,23,222.98) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1055 ஆம் இலக்க முறி மீது ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 27,23,222.98 கொண்ட பணத்தொகையை, 2008, யூலை 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைக்காரர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பள்ளேபற்றுவவின், கொரத்தொட்ட கிராமத்தில் உள்ள மில்லகஹாவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 1998, திசெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட 1539 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 21 என அடையாளம் இடப்பட்டதுமான, அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 22; கிழக்கு : காணித்துண்டு 39 ; தெற்கு : காணித்தண்டு 39 ; மேற்கு : காணித்துண்டு 44. அத்துடன் கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில், தொகுதி/பக்கம் ஜீ 1166/241 இல் பதிவு செய்யப்பட்ட எட்டு தசம் ஒன்று நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.14பே.) விஸ்தீரமானதும் அத்துடனான கட்டடம் எல்லாவற்றையும் கொண்டுள்ள ஆதனம்.

அத்துடன் சொல்லப்பட்ட முறியிலக்கம் 1055 இல் உள்ள இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவாக பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-341/1

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(திஸ்ஸமஹாறாம கிளை) - ஹேவா தொண்டிலாகே நந்தபால

ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2008, ஒற்றோபர் 29 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" ஹேவா தொண்டிலாகே நந்தபால கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில் ஹம்பாந்தோட்டை பிரசித்த நொத்தாரிசு எம். கே. எம். மக்சூமினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட 4665 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2008, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது இரண்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நாநூற்று எண்பத்தொன்பது ரூபா முப்பத்தாறு சதம் (ரூ. 2,42,489.36) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 4665 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகள் சொல்லப்பட்ட ரூபா 2,42,489.36 கொண்ட பணத்தொகையை, 2008, யூன் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைக்காரர் ஆர். எஸ். மஹாநாமவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், மகம் பற்று, திஸ்சமஹாறாமவில் உள்ள ரண்கெலிய வடக்கில் உள்ள எப். வீ. பீ.

627 இல் உள்ள காணித்துண்டு 467 இன் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு பி 466 ; கிழக்கு : காணித்துண்டு 498 ; தெற்கு : காணித்துண்டு 470 (வீதிக்கான ஒதுக்கீடு) ; மேற்கு : காணித்துண்டு 473 (வீதிக்கான ஒதுக்கீடு) அத்துடன் 0.396 ஹெக்டயார் விஸ்தீரமாணமான காணியில் உள்ள எல்லாவற்றுடனும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-341/4

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(சிலாபம் கிளை) - ஹப்பு ஆராச்சிகே டொன் அனுர லக்சிரி

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, சனவரி 22 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"ஹப்பு ஆராச்சிகே டொன் அனுர லக்சிரி கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில் சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. எஸ். மெதகொடவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.09.17 ஆந் திகதியிடப்பட்ட 4487 ஆம் இலக்க முறி, மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2008, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது ஏழு இலட்சத்து பதினாறாயிரத்து தொளாயிரத்து பதின்மூன்று ரூபா எண்பது சதம் (ரூ. 7,16,913.80) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 4487 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 7,16,913.80 கொண்ட பணத்தொகையை, 2008, நவெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைக்காரர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் காணிப் பதிவாளர் பிரிவின் பலதொற கோறளை, தேவமெதி ஹத்பற்று, கோபேகனே கிராமத்தில் உள்ள கிவுல் கொட்டுவ வெல மறுபெயர் கிம்புல்கொட்டுவெல (தற்பொழுது காணி) ஆதனம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் வை. எம். ஏ. யாப்பாவினால் தயாரிக்கப்பட்ட 2001, யூலை 25 ஆந் திகதியிடப்பட்ட 5248 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 4ஏ1 என அடையாளம் இடப்பட்டதுமான, அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 4பி ; கிழக்கு : வீதி பெருந்தெரு (வித்திக்குளியவில் இருந்து நெகவல சந்திவரை) ; தெற்கு : சொல்லப்பட்ட 5248 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 4ஏ2 ; மேற்கு : வரைபட இலக்கம் 5248 இல் உள்ள காணித்துண்டு 4ஏ4. அத்துடன் ஆறு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 6.25பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணியில் உள்ள மரங்கள், பயிர் செய்கைகள் அத்துடன் உரிமைப் பொருள்களாகவுள்ள அனைத்தும் சேர்த்து.

2. தேவமெதி ஹத்பற்று, கோபேகனே கிராமத்தில் உள்ள கிவுல் கொட்டுவ வெல மறுபெயர் கிம்புல்கொட்டுவெல (தற்பொழுது காணி) என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் வை. எம். ஏ. யாப்பாவினால் தயாரிக்கப்பட்ட 2002, யூலை 25 ஆந் திகதியிடப்பட்ட 5248 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 4ஏ2 என அடையாளம் இடப்பட்டதுமான, அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : வரைபட இலக்கம் 5248 இல் உள்ள 4ஏ1 ; கிழக்கு : வீதி பெருந்தெருக்கள் (வித்திக்குளியவில் இருந்து நெகவல சந்திவரை) ; தெற்கு : சொல்லப்பட்ட 5248 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 4ஏ3 ; மேற்கு : வரைபட இலக்கம் 5248 இல் உள்ள காணித்துண்டு 4ஏ4. அத்துடன் ஆறு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 6.25பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணியில் உள்ள மரங்கள், பயிர் செய்கைகள் அத்துடன் உரிமைப் பொருள்களாகவுள்ள அனைத்தும் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-341/3

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(தெல்கொட கிளை) - தேவசிங்க ஹன்கிலிகெதர ஜயவர்தனா மற்றும் தேவநாராயண ஹித்தர கெதர டுலீப் ரங்கஜீவ ஜயவர்தனா

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, சனவரி 22 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்

றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"தேவசிங்க ஹன்கிலிகெதர ஜயவர்தனா மற்றும் தேவநாராயண ஹித்தர கெதர டுலீப் ரங்கஜீவ ஜயவர்தனா கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். என். டபிள்யூ. ராஜகருணவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2006.11.10 மற்றும் 2007.03.23 ஆந் திகதிகள் இடப்பட்ட 24420 மற்றும் 24810 ஆம் இலக்க முறிகள், மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2008, ஓகத்து 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிகள் மீது இருபத்தொன்பது இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து ஐநூற்று பதினான்கு ரூபா தொண்ணூற்று ஆறு சதம் (ரூ. 29,22,514.96) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 24420 மற்றும்24810 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூபா 29,22,514.96) கொண்ட பணத்தொகையை, 2008, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹாநாமவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரிப் பற்றுவில் உள்ள நாரன்வெலவின் இற்றேகலலந்த என அழைக்கப்படும் 2006.01.22 ஆந் திகதியிடப்பட்ட 1858 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், ஆனால் மேலதிகமாக சரியான முறையில், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். எல். டீ. சில்வாவினால் 2006.01.23 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு '1ஏ' என அடையாளமிடப் பட்டதுமான, அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் வடக்கு: இற்றேகலலந்த வீதி ; கிழக்கு : காணித்துண்டு 1பி; தெற்கு : தேவிகா வீரசிங்காவினால் உரிமை கோரப்படும் இந்த காணியின் மிகுதி ; மேற்கு: வீதி (வெந்திசிவத்தயில் இருந்து வீதிக்குச் செல்லும்) அத்துடன் இருபத்தி இரண்டு தசம் ஒன்பது மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 22.93பே.) அல்லது 0.0580 ஹெக்டேயர். விஸ்தீரணத்துடன் கட்டடங்கள், மரங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் அதில் உள்ள எல்லாவற்றையும் கொண்டுள்ள ஆதனம். அத்துடன் கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதியின் பக்கம் சீ774/84 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வரைபட இலக்கம் 1858 இற்கு அமைவாக பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-341/5

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கந்தானை கிளை) - ஹர்ஷா நயனா அளுத்கே சந்தனி குமாரி ஜயவர்தனா

ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2009, சனவரி 22 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

''ஹர்ஷா நயனா அளுத்கே சந்தனி குமாரி ஜயவர்தனா கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கந்தானை பிரசித்த நொத்தாரிசு கே. எம். என். பெரேராவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, யூலை 29 ஆந் திகதியிடப்பட்ட 151 மற்றும் 2006, யூன் 10 ஆந் திகதியிடப்பட்ட 292 ஆகிய இலக்க முறிகள் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2008, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிகள் மீது நாற்பத்தெட்டு இலட்சத்து இருபத்தோராயிரத்து நாநூற்று எண்பத்தெட்டு ரூபா இருபது சதம் (ரூ. 48,21,488.20) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 151 மற்றும் 292 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூபா 48,21,488.20) கொண்ட பணத்தொகையை, 2008, நவெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரிப் பற்றுவில் உள்ள பியகம பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட தல்வத்த கிராமத்தில் உள்ள 'அனோவிற்ற' என அழைக்கப்படும் காணி அத்துடன் கட்டடங்கள் மற்றும் எல்லாம் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2003, சனவரி 26 ஆந் திகதியிடப்பட்ட 90/2003 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 1 'ஏ' என அடையாளமிடப்பட்டதுமான, அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட காணித்துண்டு 1 'ஏ' இன் எல்லைகள் வடகிழக்கு : கிரிந்தியவல கும்புர மற்றும் உஸ்வத்த ; தென்கிழக்கு : காணித்துண்டு 1'பி' ; தென்மேற்கு : பெருந்தெரு ; வடமேற்கு : பந்துல குணரத்தினவிற்குச் சொந்தமான காணி அத்துடன் 90/2003 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் இருபத்தி எட்டு தசம் ஒன்பது பூஜ்யம்

பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 28.90பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-341/2

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(குருநாகல் கிளை) - மஹாமலகே பிளசிடஸ் ஏள் ரோகித்த பெரேரா, "ரோகிஷ சேவிசஸ்ஸின்" ஏக உரிமையாளர்

ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, சனவரி 22 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

" மஹாமலகே பிளசிடஸ் ஏள் ரோகித்த பெரேரா கடப்பாடுடையவர், வருமதியான கொடுப்பனவுகளில் தவணை தவறியுள்ளார். கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கியூ. ரி. திசேராவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, யூன் 07 ஆந் திகதியிடப்பட்ட 3821 ஆம் இலக்க முறி, மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவாபதிரணவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட இரு முறிகளான 2004, யூலை 13 ஆந் திகதியிடப்பட்ட 756 முறி மற்றும் 2007, யூன் 29 ஆந் திகதியிடப்பட்ட 1610 ஆகிய முறிகள் மீது வருமதியான கொடுப்பனவில் (முதலாவதாக மேலதிகமாக ஆதனம் குறித்து அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) 2008, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிகள் மீது எழுபத்தைந்து இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று எண்பது ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 75,10,580.65) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளது,

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவாபத்திரண வினால், முறையே அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, திசெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட 905 மற்றும் 2007, யூன் 29 ஆந் திகதியிடப்பட்ட 1611 ஆம் இலக்க முறிகளுக்கு அமைய, 2008, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்துக்கு (ஆதனம் குறித்து அட்டவணையில் இரண்டாவதாக மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது) சொல்லப்பட்ட முறிகள் மீது எண்பத்திரண்டு இலட்சத்து இரண்டாயிரத்து இருபத்திரண்டு ரூபா ஐந்து சதம் (ரூ. 82,02,022.05) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேருமதியாகவும் உள்ளது.

அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான முதலாவதாகவும் மற்றும் இரண்டாவதாகவும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 3821, 756, 1610, 905 மற்றும் 1611 ஆகிய முறிகள் மீது ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ஒரு கோடி ஐம்பத்து ஏழு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து அறுநூற்று இரண்டு ரூபா எழுபது சதம் (ரூ. 1,57,12,602.70) பணத்தொகையை 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதியளிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும், விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹாநாமவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோரளை, ராகம் பற்றுவின் கட்டான பிரதேச சபையின் ரத்தொலுவ உப அலுவலகத்தின் உடம்மிற்ற கிராமத்தில் உள்ள "கஹட்டகஹா மறுபெயர் பினிதியவத்த" என அழைக்கப்படும் காணி, அத்துடன் கட்டடங்கள் மற்றும் எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஈ. ஜே. பி. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 1996, திசெம்பர் 5 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 4811 இல் காட்டப்பட்டுள்ளதுமான காணி, அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுடன், மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் வடக்கு : வீதியும், எம். பிரான்சிஸ் பெரேராவின் காணியும் ; கிழக்கு : எம். பிரான்சிஸ் பெரேராவின் காணி ; தெற்கில் : எம். சீ. எல். ஈ. பெரேராவின் காணி ; மேற்கு : எட்மன் ஜோசப் பெரோவின் மற்றும் எம். எல். எம். எல். பெரேராவின் காணி. அத்துடன் நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பி 172/235 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதும், பதின்மூன்று தசம் ஏழு நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.74பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (முன்னர் கொழும்பு மாவட்டத்துடனானது) நீர்கொழும்பு பதிவாளர் பிரிவின் ராகம் பற்றுவ அளுத்குறு கோறள உடம்மிற்ற கிராமத்தில் உள்ள "கஹட்டகஹாவத்த, டவற்றகஹவத்த, டவற்றகஹகும்புர மறுபெயர் டலுபொத்த, கோறக்கஹவத்த, கொங்கஹவத்த மற்றும் டவற்றகஹடலுபொத்த" எனும் காணி அத்துடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஆர். எஸ். பொன்சேகாவினால் தயாரிக்கப்பட்ட 2001, ஒகத்து 17 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 2024 இல் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 1 என, அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுடன், மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் வடக்கு : களு எல ; கிழக்கு : அதே காணியின் மிகுதிப் பகுதி ; தெற்கில் : வீதி மற்றும் பி. பாலசூரியவின் காணி ; மேற்கு : உடம்மிற்ற வீதி. அத்துடன் பி. பாலசூரியவின் காணி. நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பி 155/263 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதும், மூன்று றூட் (0ஏ. 3றூ. 0பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி. அத்துடன் சொல்லப்பட்ட வரைபடத்திற்கு அமைய இந்த காணியின் தெற்குப் பகுதி வீதியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

3-341/6

**பேன் ஏசியா பாங்கிங் கூட்டுத்தாபனம் (பீஎல்சீ)**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கொட்டாஞ்சேனை கிளை) – வாடிக்கையாளரின் பெயர் : அரியப்பன் பெருமாள் குபேரன்

*2009, சனவரி 28 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீயின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வரும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.*

*"அரியப்பன் பெருமாள் குபேரன், முன்னர் வரையறுக்கப்பட்ட பான் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட பதிவு இல. பீகியு 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் தயாரிக்கப்பட்டு 2006, யூலை 31 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1057இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் ; பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு பண முதல் கணக்கின் மீது இருபத்தாறு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எழுநூற்று பதினாறு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 26,19,716.65) கொண்ட தொகை மற்றும் 2009, சனவரி 08 ஆந் திகதி வரை வட்டியும் அத்துடன் இருபத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் ரூபா (ரூ. 23,92,000) கொண்ட தொகை மீது 2009, சனவரி 9 ஆந் திகதியிலிருந்து சொல்லப்பட்ட முறிமீதான கொடுப்பனவு திகதிவரை ஆண்டிற்கு 27% வட்டியுடனும் சேர்த்து தற்போது வரவேண்டியும் உரியதாகவும் உள்ளதாதலாலும் ;*

*சொல்லப்பட்ட முறி இல. 1057 இன் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை இருபத்தாறு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எழுநூற்று பதினாறு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 26,19,716.65) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் அத்துடன் 2009, சனவரி 09 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரையான மேற்கூறப்பட்ட வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள, வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, பிரகாரம் கோட்டே, பிட்டகோட்டே, இல. 474, மஹநாம டிரைவ், "ஆர். எஸ். எம். ஒக்ஷனியர்" இன் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. இரஞ்சித்த எஸ். மஹாநாம அவர்களுக்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் தத்துவமும் அளிக்கப்படுகிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, கெஸ்பேவ பிரதேச சபையின் பொரலஸ்கமுவ உப அலுவலக எல்லைகளுக்குள் கொழும்பு அபிவிருத்தி சபையினுள் பொரலஸ்கமுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் எகொடவத்த வீதி, வரிமதிப்பு இலக்கங்கள் 18/ 16 மற்றும் 18/16 1/ 1 ஐக் கொண்டதும் "மாரகஹவத்த" என்ற "தமினகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எல். பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1968.03.24 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1877 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஈ1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு ஈ1 இன் எல்லைகளாவன – வடக்கு: வரைபடம் இல. 706 இல் துண்டு பி ; கிழக்கு : துண்டு ஈ2 ; தெற்கு : தற்போது கே. எட்வின் பெரோவின் ஆதனம் ; மேற்கு : தற்போது எம். ஜே. பெரேராவின் ஆதனம் மற்றும் வரைபடம் இல. 706 இல் துண்டு ஏ. இது பதினாறு தசம் மூன்று ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 16.39பே.) விஸ்தீரணமுடையது. கல்கிஸ்ஸை காணி பதிவகத்தில் தலைப்பு எம் 894/65 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*அண்மைய நில அளவைவிற்கமைய சொல்லப்பட்ட வரைபடம் இல. 1877 இல் சொல்லப்பட்ட துண்டு ஈ1 பின்வருமாறு விவரிக்கப் படுகின்றது:-*

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, கெஸ்பேவ பிரதேச சபையின் பொரலஸ்கமுவ உப அலுவலக எல்லைகளுக்குள், பொரலஸ்கமுவையில் அமைந்துள்ளதும் எகொடவத்த வீதி, 5 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பு இல. 18/16 ஐக் கொண்டதும் "மஹரகஹவத்த" என்ற "தமினகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எல். பீ. சத்தரசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 2006.05.27 ஆந் திகதியிடப்பட்ட மேலும் திருத்தமாக 2006.05.28 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 35/ 06 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன – வடக்கு : வீதி ; கிழக்கு : 5 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பு இல. 18/17 ; தெற்கு : 5 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பு இல. 18/14 ; மேற்கு : 5 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பு இல. 18/11, மேலும் திருத்தமாக 18/14 மற்றும் வீதி. இது பதினைந்து தசம் ஏழு மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.73பே.) மேலும் திருத்தமாக பதினைந்து தசம் ஏழு எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0று. 15.78பே.) விஸ்தீரணமுடையது.*

*சொல்லப்பட்ட வரைபடம் இல. 706 குறிப்பிடப்பட்டள்ள துண்டு ஏ மற்றும் சொல்லப்பட்ட துண்டு பி இன் வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இரஞ்சித் பெரேரா,
சிரேஷ்ட முகாமையாளர் – அறவிடுதல்கள்.

*3-340/2*

---

**பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பஞ்சிகாவத்தை கிளை) – வாடிக்கையாளரின் பெயர் : தேவபுர சுனில் சாந்த குமார

*2008.12.17 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீயின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில்*

றில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

" தேவபுர சுனில் சாந்த குமார, முன்னர் வரையறுக்கப்பட்ட பான் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட பதிவு இல. பீகியு 48ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, திசெம்பர் 04 மற்றும் 2004.06.29 ஆந் திகதிகளிடப்பட்ட முறையே ஈட்டுமுறி இலக்கங்கள் 2527 மற்றும் 1336 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் ; பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு பண முதல் கணக்கின் மீது பதின்நான்கு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து நாநூற்று அறுபத்தெட்டு ரூபா எட்டு சதம் (ரூ. 14,55,468.08) கொண்ட தொகை மற்றும் 2008.11.18 ஆந் திகதி வரையான வட்டி அத்துடன் பதின்மூன்று இலட்சத்து அறுபத்தேழு ஆயிரத்து அறுநூற்று அறுபத்தேழு ரூபா அறுபத்தாறு சதம் (ரூ. 13,67,667.66) கொண்ட தொகை மீது 2008.11.19 ஆந் திகதியிலிருந்து சொல்லப்பட்ட முறிகள் மீதான கொடுப்பனவு திகதி வரை ஆண்டிற்கு 29% வட்டியுடனும் தற்போது வரவேண்டியும் உரியதாகவும் உள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 1336 மற்றும் 2527 ஆகியவற்றின் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை பதின்நான்கு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து நாநூற்று அறுபத்தெட்டு ரூபா எட்டு சதம் (ரூ. 14,55,468.08) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் அத்துடன் 2008.11.19 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்கூறப்பட்ட வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள, வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கோட்டே, பெத்தகான வீதி, 134 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் பீ. கே. ஈ. சேனாபதி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் வழங்கப்படுகிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பள்ளே பற்று, கடுவளை பிரதேச சபை எல்லைகளுக்குள் அத்துருகிரிய வல்கம, அத்துருகிரிய பிரதான வீதி கொட்டாவக்கப்பால் அமைந்துள்ளதும் "கல்தொலேலந்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். கே. மஹிந்த அவர்களால் தயாரிக்கப்பட்டு 2003.11.28 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2129 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. லொரென்ஷுஹேவ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988.05.10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 98 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 2 இன் ஒரு மீள் நிலஅளவையாக இருக்கின்ற) என அடையாள மிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள வீடு, மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு 2 இன் எல்லைகளாவன - வடக்கு : கனத்தை வீதி ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 98 இல் துண்டு 1 (15 அடி அகல வீதிக்கான ஒதுக்கு) மற்றும் சொல்லப்பட்ட வரைபடம் இல. 98 இல் துண்டு 3; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 98 இல் துண்டு 3 ; மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. கே. சுமணதாச அவர்களால் தயாரிக்கப்பட்டு 1981.06.01 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 76/443 இல் துண்டு 21. இது பதினைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15பே.) அல்லது 0.03794 ஹெக்டயார் விஸ்தீரணமுடையது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 98 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 9, 22 மற்றும் 1 ஆகியவற்றின் மீதான வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரஞ்சித் பெரேரா,
சிரேஷ்ட முகாமையாளர் - அறவிடுதல்கள்.

3-340/5

---

### பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(டாம் வீதி கிளை) - வாடிக்கையாளரின் பெயர் : சுப்பையா சோலைமலை மற்றும் சோலைமலை திருச்செல்வம்

2009.01.28 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீயின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

"ஈடுவைத்தவரான சுப்பையா சோலைமலை மற்றும் கடப்பாடுடையவர்களான சுப்பையா சோலைமலை மற்றும் சோலைமலை திருச்செல்வம் ஆகியோர், முன்னர் வரையறுக்கப்பட்ட பான் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட பதிவு இல. பிகியு 48ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். கணேசயோகன் அவர்களால் தயாரிக்கப்பட்டு, 2006, ஓகத்து 23 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1262 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறி யுள்ளாராதலாலும் ; பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு பண முதல் கணக்கின் மீது இரண்டு கோடி பதின்மூன்று இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து ஆயிரத்து நாநூற்று அறுபத்தெட்டு ரூபா ஒரு சதம் (ரூ. 2,13,79,468.01) கொண்ட தொகை மற்றும் 2008.12.31 ஆந் திகதி வரையான வட்டி அத்துடன் 2009, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து ஒரு கோடி நான்கு இலட்சத்து அறுபத்தாறாயிரம் ரூபா (ரூ. 1,04,66,000) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தொன்பது சதவீத 29% வட்டி மற்றும் ஒரு கோடி பன்னிரண்டு ஆயிரத்து தொளாயிரத்து இருபத்து மூன்று ரூபா முப்பது சதம் (ரூ. 1,00,12,923.30) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தைந்து சதவீதம் (25%) வட்டியுடனும் சேர்த்து வரவேண்டியும் உரியதாகவும் உள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இல. 1262 இன் மூலம் வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை இரண்டு கோடி பதின்மூன்று இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து ஆயிரத்து நாநூற்று அறுபத்தெட்டு

ரூபா ஒரு சதம் (ரூ. 2,13,79,468.01) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் அத்துடன் 2009.01.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள, வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கோட்டே, பிட்டகோட்டே, இல. 474, மஹாநாம டிரைவ், "ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்" இன் உத்தரவுபெற்ற ஏலதாரர் இரஞ்சித் எஸ். மஹநாம அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் வழங்கப்படுகிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, கொழும்பு மாநகர சபை நிருவாக எல்லைகளுக்குள் வட்டார இல. 9 - கொச்சிக்கடை வடக்கு, புறக்கோட்டை, கபொஸ் ஒழுங்கைக்கப்பால் பெசேஜ் மற்றும் செட்டித்தெரு வழியே அமைந்துள்ளதும் செட்டித்தெரு வரிமதிப்பு இல. 77 ஐக் தற்போது கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1994.08.09 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4631 இல் குறிப்பிடப்பட்டு துண்டு எக்ஸ் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். லோகநாதன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1979, செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2450 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் தற்போது கபொஸ் ஒழுங்கை, வரிமதிப்பு இல. 19 ஐக் கொண்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, சனவரி 7 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1886 இல் துண்டு பி1 இன் ஒன்றிணைக்கப்பட்டதும் ஒரு மீள் நிலஅளவையாக இருக்கின்றதும்) என அடையாளமிடப்பட்டதும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடத்துடன் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு எக்ஸ் இன் எல்லைகளாவன - வடக்கு : செட்டித்தெரு வரிமதிப்பு இல. 79 ஐக் கொண்ட வளவுகள் ; கிழக்கு : செட்டித்தெரு ; தெற்கு : செட்டித்தெரு வரிமதிப்பு இலக்கங்கள் 73, 69, 65, 59 மற்றும் 53 ஐக் கொண்ட வளவுகள் ; மேற்கு : கொழும்பு மத்திய சூப்பர் மார்க்கெட்டின் வளவுகள் மற்றும் பெசேஜ். இது பதின்மூன்று தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.50பே.) விஸ்தீரணமுடையது; கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு ஏ 1086/ 52 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட வரைபடம் இல. 4631 இல் துண்டு எக்ஸ் என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு பின்வரும் காணித்துண்டுகளின் ஒன்றிணைப்பாக இருக்கின்றது. அதாவது -

(1) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் வட்டார இல. 9 - கொச்சிக்கடை வடக்கு, புறக்கோட்டையில் அமைந்துள்ளதும் சென். ஜோன்ஸ் வீதி, வரி மதிப்பு இலக்கங்கள் 90/80, 90/81, 90/82, 90/83, 90/84, 90/85 மற்றும் 90/87 ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, சனவரி 7 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1886 இல் குறிப்பிடப்பட்டு துண்டு பி 1 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். விஜயரட்னம் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1979, ஓகத்து 15 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 34/ 1979 இல் துண்டு பி1 இன் ஒரு மீள் நிஅளவையாக இருக்கின்ற) மற்றும் (பீபீ சீஓ 6587 இல் துண்டு 1 ஐக் பார்க்க) கொழும்பு மத்திய சூப்பர் மார்க்கெட் இனி அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்பட்ட காணியை கழித்து) என அடையாளமிடப்பட்டதுமாக பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு எக்ஸ் இன் எல்லைகளாவன - வடக்கு : செட்டித்தெரு, வரிமதிப்பு இலக்கங்கள் 77 மற்றும் 79 ஐக் கொண்ட வளவுகள் ; கிழக்கு : செட்டித்தெரு, வரிமதிப்பு இலக்கங்கள் 77, 73, 69, 65 மற்றும் 59 ஐக் கொண்ட வளவுகள் ; தெற்கு : செட்டித்தெரு வரிமதிப்பு இலக்கங்கள் 59 மற்றும் 53 ஐக் கொண்ட வளவுகள் ; மேற்கு : கொழும்பு மத்திய சூப்பர் மார்க்கெட்டின் வளவுகள் மற்றும் பெசேஜ். இது எட்டு தசம் ஒன்பது சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.90பே.). கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு ஏ 774/21 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் சென். போல்ஸ் வட்டாரம் செட்டித்தெருவில் அமைந்துள்ளதும் வரிமதிப்பு இலக்கங்கள் 75 மற்றும் 77 ஐ தற்போது கொண்டதும் வரிமதிப்பு இல. 40 ஐக் கொண்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடத்துடன் சேர்த்து. இதன் எல்லைகளாவன - வடக்கு : வரிமதிப்பு இல. 41 ஐக் கொண்ட எஸ். எல். மொஹமத்தோ ஹாஜியாரின் ஆதனம் ; கிழக்கு : செட்டித்தெரு ; தெற்கு : வரிமதிப்பு இல. 39 ஐக் கொண்ட வீ. சின்னத்தம்பி செட்டியாரின் ஆதனம் ; மேற்கு : வரிமதிப்பு இலக்கங்கள் 18 இலிருந்து 23 வரை கொண்ட கே. சின்னையா புள்ளே இன் ஆதனம் உத்தரவுபெற்ற நிலஅளவையாளரும் மட்டமாக்குநருமான எஸ். கந்தசாமி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1907, சனவரி 29 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை பட இல. 116 இற்கமைய நான்கோடு நூறில் தொண்ணூறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 4 90/100 பே.) விஸ்தீரணமுடையது. மேலே விவரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் வளவுகள்.

அண்மைய மீள் நில அளவிற்கமைய சொல்லப்பட்ட காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் வட்டார இலக்கம் 9, கொச்சிக்கடை, செட்டித்தெரு வழியே அமைந்துள்ளதும் வரிமதிப்பு இல. 75 ஐ தற்போது கொண்டதும் வரிமதிப்பு இல. 40 ஐக் கொண்ட பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் இதன் எல்லைகளாவன - வடக்கு : செட்டித்தெரு, வரிமதிப்பு இல. 79 ஐக் கொண்ட வளவுகள் ; கிழக்கு : செட்டித்தெரு ; தெற்கு : செட்டித்தெரு, வரிமதிப்பு இல. 71 ஐக் கொண்ட வளவுகள் ; மேற்கு : புறக்கோட்டை, சென் ஜோன்ஸ் வீதி, வரிமதிப்பு இல. தோட்டம் 90 ஐக் கொண்ட வளவுகள். இது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். லோகநாதன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1979, செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப் பட்ட வரைபடம் இல. 2450 இற்கமைய நான்கு தசம் எட்டு எட்டு பேர்ச்சஸ் கள் (0ஏ. 0றூ. 4.88பே.) விஸ்தீரணமுடையது. கொழும்பு காணிப் பதிவகத்தில் தலைப்பு ஏ 637/32 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 4631 இல் துண்டு எக்ஸ் என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுக்கு இட்டுச் செல்லும் கபோஸ் ஒழுங்கையிலிருந்து பெசேஜ் மீதான வழியுரிமை மற்றும் ஏனைய உரிமைகளுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரஞ்சித் பெரேரா,
சிரேஷ்ட முகாமையாளர் - அறவிடுதல்கள்.

3-340/ 9

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''(இதகனத்துப் பின்னர் ''பங்காளிகள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவோரும்), வந்துரம்பவில் பங்காண்மையில் தொழில் கொண்டு நடாத்துவோருமான உதார சமிந்த அலஸ் மற்றும் இம்புல்கொட ஹேவகே லீலா என்போர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. எஸ். பினிதிய என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001, யூலை.13 ஆந் திகதிய 11909 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2008, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒன்பது இலட்சத்து எண்பத்தேழாயிரத்து எண்ணூற்று பத்தொன்பது ரூபா எண்பது சதம் (ரூ. 9,87,819.80) கொண்ட தொகையும் 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஏழு இலட்சத்து பதின்மூவாயிரத்து நூற்று தொண்ணூற்று ஒரு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 7,13,191.47) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பதினாறு தசம் எட்டு எட்டு வீதத்தில் கணக்கிடப்பட்ட (16.88%) வட்டியும் சொல்லப்பட்ட முறிமீது சொல்லப்பட்ட உதார சமிந்த அலஸ் மற்றும் இம்புல்கொட ஹேவகே லீலா என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒன்பது இலட்சத்து எண்பத்தேழாயிரத்து எண்ணூற்று பத்தொன்பது ரூபா எண்பது சதம் (ரூ. 9,87,819.80) கொண்ட தொகையும் 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஏழு இலட்சத்து பதின்மூவாயிரத்து நூற்று தொண்ணூற்று ஒரு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 7,13,191.47) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான பதினாறு தசம் எட்டு எட்டு வீதத்தில் கணக்கிடப்பட்ட (16.88%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப் படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 11909 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**11909 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டத்தின் கங்கபொட பத்து தெற்கிலுள்ள இஹல லெல்வெலவில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் தலைமையதிபதியின் சார்பில் காலி நிலஅளவைகள் கண்காணிப்பாளர் கே கார்ட்டியஹேவ என்பவரினால் மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்டதும் அரசாங்க நிலஅளவையாளர் வீ. கொடஹேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1975.06.04 ஆந் திகதிய ஜீ/776 ஆம் இலக்க பூர்வாங்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 4 எனக் குறித்துக் காட்டப்பட்டதும், வெலிதெனிய தோட்டத்தின் வரையறுக்கப்பட்ட பாகமாகவமைகின்றதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : பூ. வ. 11198/3 ; வடகிழக்கில் : பூ. வ. ஜீ/776 இலுள்ள காணித்துண்டம் 5 ; கிழக்கில் : பூ. வ. 11829/10 ; தெற்கில் : ரீ. பீ. க்கள் 352292, 353114, 350395 மற்றும் 353114 ; தென்கிழக்கில் : ரீ. பீ. 316583 மற்றும் ; வடமேற்கில் : ரீ. பீ. க்கள் 350395 மற்றும் டீ. எல். ரொமானிசினாலும் ஏனையோரினாலும் உரிமை கோரப்பட்ட 348263 மில்லகஹ முலன கும்புற மற்றும் பூ. வ. 11198/3, மலதொல அத்துடன் பூ. வ. ஜீ/776 இலுள்ள காணித்துண்டம் 3 ; பரப்பளவில் இது, நான்கு ஏக்கர் மூன்று றூட் இருபத்தொரு பேர்ச்சஸ்கள் (4ஏ. 3றூ. 21பே.) கொண்டுள்ளதுடன் காலி மாவட்டக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அக்மீமனவைச் சேர்ந்த உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ஏ. லொக்குநாராங்கொட என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.08.02 ஆந் திகதிய 20 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் ஏ என இக்காணி இப்போது குறித்துக்காட்டப் பட்டுள்ளது.

தென் மாகாணம், காலி மாவட்டம், கங்கபொட பத்து தெற்கிலுள்ள இஹல கம்பியவில் அமைந்துள்ளதும், (ரீ. பீ. 348061 என்ற இலக்கத்தைக் கொண்டதும்), எந்தகலகவஹேன எனவழைக்கப்படும் காணித்துண்டினதுமான மண் மற்றும் மரங்கள் அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : முதலியார் குணரத்னவினால் உரிமை கோரப்பட்ட எந்தகலகவகும்புர ; கிழக்கில் : முதலியார் குணரத்னவினால் உரிமைகோரப்பட்ட எந்தகலகவகும்புரவும் முடிக்குரியதாகச் சொல்லப்பட்ட பெனவங்ககந்ததெனியவும் ; தெற்கில் : முடிக்குரியதாகச் சொல்லப்பட்ட எந்தகலகவஹேன ; மற்றும் மேற்கில் : வீதி நெடுகிலுமான ஒதுக்கிடம் ; பரப்பளவில் இது மூன்று ஏக்கர் இருபத்தொன்பது பேர்ச்சஸ்களை (3ஏ. 0றூ. 29பே.) கொண்டுள்ளது. இக்காணி காலியைச் சேர்ந்த உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. லயனல் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000.11.20 ஆந் திகதிய 175 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் ஏ என இப்போது குறித்துக்காட்டப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட இஹல லெல்வெலவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள எல்லாப் பயிர்களுடனும் மஹாமுலனகொட எனவழைக்கப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : ரீ. பி. 325030 ; கிழக்கில் : ரீ. பீ. 216357 மற்றும் பூ. வ. 11823 இலுள்ள கணித்துண்டம் 5 ; தெற்கில் : பூ. வ. 11823 இலுள்ள காணித்துண்டம் 7 மற்றும் ; மேற்கில் : முதலியார் குணரத்னவினாலும் ஏனையோரினாலும் உரிமை கோரப்பட்ட

மஹாமுலன, பரப்பளவில் இது, நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட 1922.03.20 ஆந் திகதிய 348264 ஆம் இலக்க உரித்து வரைபடத்தின்படி ஒரு றூட் இருபத்தொன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 29பே.) ஆனால் இப்போது ஒரு றூட் இருபத்திநான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 24பே.) கொண்டுள்ளது.

இப்போது இக்காணி, காலியைச் சேர்ந்த நிலஅளவையாளர் எம். ஜீ. லயனல் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.03.04 ஆந் திகதிய 190 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் பீ எனக் குறித்துக்காட்டப்படுகின்றது ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

மேற்கூறப்பட்ட இஹல வெல்வெலவில் அமைந்துள்ளதும், மஹாமுலனகொட எனவும் மற்றும் வெலியதெனிய தோட்டம் எனவும் அறியப்படுவதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. லயனல் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.03.04 ஆந் திகதிய 190 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்ட காணித்துண்டம் பீ எனவழைக்கப்படும் காணியினதாய் அதன்மீதுள்ள மண், பயிர்கள், மற்றும் வேறெல்லாம் அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் பீ பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில்: பிரதான வீதியிலிருந்து பிட்டிஹராவுக்குச் செல்லும் வீதி ; கிழக்கில் : சொல்லப்பட்ட 190 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் சீ ; தெற்கில் : பூ. வ. 11823 இலுள்ள காணித்துண்டம் 5 ; மற்றும் மேற்கில் : சொல்லப்பட்ட 190 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் ஏ மற்றும் மஹாமுலன ; பரப்பளவில் இது, ஒரு றூட் இருபத்தைந்து தசம் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 25.6பே.) கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இஹல வெல்வெலவில் அமைந்துள்ளதும், அதன் மீதுள்ள எல்லாப் பயிர்களுடனும் மஹாமுலனகொட எனவழைக்கப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : பூ. வ. 11823 இலுள்ள காணித்துண்டங்கள் 4 மற்றும் 5 அத்துடன் ரீ. பி. 216501 ; கிழக்கில் : ரீ. பி. 220523 மற்றும் 220522 அத்துடன் பூ. வ. 11823 இலுள்ள காணித்துண்டம் 6 ; தெற்கில் : பூ. வ. 11823 இலுள்ள காணித்துண்டம் 8 மற்றும் வீதிக்கான ஓர் ஒதுக்கிடம், ; மற்றும் மேற்கில் : எல். பீ. 2083 ; பரப்பளவில் இது, நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட 1922.03.20 ஆந் திகதிய 348265 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் ஒரு றூட் ஐந்து பேர்ச்சஸ்கள் (1ஏ. 1றூ. 5பே.) கொண்டுள்ளது. ஆனால் இப்போது ஒரு ஏக்கர் ஒரு றூட் இருபத்து நான்கு பேர்ச்சஸ்கள் (1ஏ. 1றூ. 24பே.) கொண்டுள்ளது.

இக்காணி, இப்பொழுது செல்லப்பட்ட 190 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் ஏ எனக் குறித்துக்காட்டப்படுகின்றதுடன் அதன் எல்லைகள் பின்வருமாறு :-

மேற்கூறப்பட்ட இஹல வெல்வெலவில் அமைந்துள்ளதும், மஹாமுலனகொட அத்துடன் வெலிதெனிய தோட்டம் எனவும் அறியப்படுவதாய் சொல்லப்பட்ட 190 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்ட காணித்துண்டம் ஏ எனவழைக்கப்படும் காணியினதாய் அதன்மீதுள்ள மண், பயிர்கள், மற்றும் வேறெல்லாம் அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் ஏ பின்வருமாறு எல்லைகளையுடையது - வடக்கில்: மஹாமுலன; கிழக்கில் : சொல்லப்பட்ட 190 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள பீ மற்றும் பூ. வ. 11823 இலுள்ள காணித்துண்டங்கள் 5 மற்றும் 6 மஹாமுலனகொட, ரீ. பீ. 220552; தெற்கில் : பூ. வ. 11823 இலுள்ள காணித்துண்டம் பீ மற்றும் ; மேற்கில் : ரீ. பீ. 348265 இன் பாகமும் எல். பீ. 2083 இன் பாகமும் (இப்போது பூ. வ. 776 இல் காணித்துண்டம் 4) பரப்பளவில் இது, ஒரு ஏக்கர் ஒரு றூட் ஆறு தசம் ஆறு பேர்ச்சஸ்கள் (1ஏ. 1றூ. 6.6பே.) கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

3-315/3

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"திசாநாயக்க ஹார்ட்வியார்" என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் உரிமையாண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற, திரு. திசாநாயக்க முதியான்சேலாகே ஜீவன் இந்திக்க திசாநாயக்க என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பதுளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எச். எம் சீ. சீ. எச். மெனிக்கே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.10.16 ஆந் திகதிய 1588 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் மேற்கூறப்பட்ட 1588 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது 2008, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஏழு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்திரண்டு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 7,32,682.81) கொண்ட தொகையும் 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆறு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எண்ணூற்று அறுபத்தேழு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 6,47,867.55) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபீவீ) ஆண்டொன்றுக்குப் ஆறு தசம் ஐந்து சதவீத (6.5%) வட்டியும் சொல்லப்பட்ட திசாநாயக்க முதியான்சேலாகே ஜீவன் இந்திக்க திசாநாயக்க என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக்

கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஏழு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்திரண்டு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 7,32,682.81) கொண்ட தொகையும் 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆறு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எண்ணூற்று அறுபத்தேழு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 6,47,867.55) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களில் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபீவீ) ஆண்டொன்றுக்குப் ஆறு தசம் ஐந்து சதவீத (6.5%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1588 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 1588 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

ஊவா மாகாணத்தின் மொனறாகலை மாவட்டத்திலுள்ள மொனறாகலைப் பிரதேச செயலகம் முப்பான புத்தள வெதிரட்ட கோரளையில் பண்டார வாடியவில் அமைந்துள்ளதும், ''ரத்மல்கஸ்ஆர'' எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : பண்டாரவாடியவிலிருந்து நக்கலவரையிலான வீதி ; கிழக்கில் : ரத்மலே ஓய மறுபெயர் ரத்மல்கஸ்ஆர ; தெற்கில் : எச். எம். முதலிஹாமிக்குக்கு குத்தகை கொடுக்கப்பட்ட இ. கி. வ. 172 இலுள்ள காணித்துண்டம் 56 ; மற்றும் மேற்கில் : முடிக்குரிய சீஹின் கெலே ; பரப்பளவில் இது. அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் இரண்டு ஏக்கர் இரண்டு றூட்களை (2ஏ. 2றூ. 0பே.) கொண்டுள்ளதுடன், மொனறாகலைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பி. ஜீ. சீ. புஷ்பகுமார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1997.07.10 ஆந் திகதிய 853 ஆம் இலக்க, வரைபடத்தின் மிக அண்மையிலானவொரு நிலஅளவையின்படி மேலேயுள்ள காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-

ஊவா மாகாணத்தின் மொனறாகலை மாவட்டத்திலுள்ள மொனறாகலைப் பிரதேச செயலகம், புத்தள வெதிரட்ட கோறளை, முப்பான கிராமத்தில் பண்டாரவாடியவில் அமைந்துள்ளதும் ''ரத்மல்கஸ்ஆர'' எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பி. ஜீ. சீ. புஷ்பகுமார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.02.10 ஆந் திகதிய 853 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : பண்டாரவாடியவிலிருந்து நக்கலவரையிலான பாதை ; கிழக்கில் : ரத்மலே ஓய ; தெற்கில் : அதே காணியின் எஞ்சியுள்ள பகுதியும் எச். எம். முதலிஹாமியினால் உரிமை கோரப்பட்ட காணியும் ; மற்றும் மேற்கில் : முடிக்குரிய காணி ; பரப்பளவில் இது. அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் இரண்டு ஏக்கர் இரண்டு றூட்களை (2ஏ. 2றூ. 0பே.) கொண்டுள்ளதுடன், மொனறாகலைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

3-315/2

---

### இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"தமித் ஹால் மோல" என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் உரிமையாண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற பதுளையைச் சேர்ந்த திருமதி பஸ்நாயக்க முதியான்சேலாகே சுவர்ணலதா என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பதுளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எம். சீ. எச். மெனிக்கே என்பவரினால் எல்லாம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.05.19 ஆந் திகதிய 1248 ஆம் , 2007.01.04 ஆந் திகதிய 1807 ஆம், 2008.02.01 ஆந் திகதிய 2363 ஆம் மற்றும் 2008.02.01 ஆந் திகதிய 2364 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் மேற்கூறப்பட்ட 1248 ஆம், 1807 ஆம், 2363ஆம் மற்றும் 2364 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதியன்றுள்ளவாறாக இருபத்தியொரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து நாநூற்று இருபத்திரண்டு ரூபா முப்பது சதம் (ரூ. 21,32,422.30) கொண்ட தொகையும் 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மூன்று இலட்சத்து பதினோராயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு ரூபா முப்பத்து மூன்று சதம் (ரூ. 3,11,887.33) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது

வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபீவீ) ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று சதவீத (13%) வட்டியும் அத்துடன் இரண்டு இலட்சத்து ஏழுபத் நான்காயிரத்து தொளாயிரத்து தொண்ணூறு ரூபா (ரூ. 2,74,990) கொண்ட தொகை மீது ஏழு சதவீத (7%) வட்டியும் அத்துடன் சொல்லப்பட்ட பதின்மூன்று இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தி ஏழு ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூ. 13,38,847.99) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தொரு சதவீத (31%) வட்டியும் சொல்லப்பட்ட திருமதி பஸ்நாயக்க முதியான்செலாகே சுவர்ணலதா என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இருபத்தியொரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்த நாநூற்று இருபத்திரண்டு ரூபா முப்பது சதம் (ரூ. 21,32,422.30) கொண்ட தொகையும் 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மூன்று இலட்சத்து பதினோராயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு ரூபா முப்பத்து மூன்று சதம் (ரூ. 3,11,887.33) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபீவீ) ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று சதவீத (13%) வட்டியுடனும் அத்துடன் இரண்டு இலட்சத்து ஏழுபத் நான்காயிரத்து தொளாயிரத்து தொண்ணூறு ரூபா (ரூ. 2,74,990) கொண்ட தொகை மீது ஏழு சதவீத (7%) வட்டியுடனும் அத்துடன் சொல்லப்பட்ட பதின்மூன்று இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தி ஏழு ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூ. 13,38,847.99) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தொரு சதவீத (31%) வட்டியுடனும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1248 ஆம், 1807 ஆம், 2363 ஆம் மற்றும் 2364 ஆம் இலக்க மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 1248 ஆம், 1807 ஆம் மற்றும் 2363 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. ஊவா மாகாணத்தின் மொனறாகலை மாவட்டத்திலுள்ள வெல்லவாய கோறளை வெல்லவாய பிரிவில் ரத்மல்வெஹெர கிராமத்தில் அமைந்துள்ளதும், "கோங்கஹாவத்த மற்றும் புஹாரெஹேன" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், மொனறாகலையைச் சேர்ந்த உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. வில்மட் சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.01.07 ஆந் திகதிய 1353 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 02 எனக் குறித்துக்காட்டப்பட்டதும் (இகிவ 532 இன் காணித்துண்டம் எஸ். 4387 இன் பகுதி), பின்வரும் எல்லைகளையுடையதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; வடக்கில் : வீதி நெடுகிலுமான ஒதுக்கிடம் ; கிழக்கில் : காணித்துண்டம் 26 (ஆர) ; தெற்கில் : அதே காணியின் மீதிப்பாகம் மற்றும் ; மேற்கில் : காணித்துண்டம் 1; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும், சொல்லப்பட்ட வரைபடத்தின்படி ஒரு றூட் இரண்டு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 2.5பே.) கொண்டுள்ளதுடன், மொனறாகலைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 2364 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட சொத்தின் விவரணம்

பின்வருவன உட்பட, அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி மற்றும் சாதனம் முழுவதும் :-

| விவரணம் | அளவு |
|---|---|
| கட்டர்பிலர் புள்டோசர் | 01 |
| அடிச்சட்டக இல. 09 இசட் 03172 | |
| என்ஜின் இல. 3304ட1 | |

உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள் மற்றும் கருவிகளுடன் சேர்த்து.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

3-315/1

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2009.01.08 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"1. பிரசித்த நொத்தாரிசு திரு. ஆரியசேன கால்லகே அத்தாட்சிப்படுத்திய 2007.01.16 ஆந் திகதியிட்ட முறி இல. 658 மற்றும் 2007.10.10 ஆந் திகதியிட்ட 814 ஆகியவற்றின் பேரில் இல. 27, 42 ஆம் ஒழுங்கை, கொழும்பு 06 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் உஜேய அக்வா என்றர்பிரைசஸ் (பிரை) லிமிட்டெட்டிடமிருந்து முதலும் 2008.11.30 வரை வட்டியும் ஐம்பத்தைந்து இலட்சத்து எழுபத்தெட்டாயிரம் ரூபா தொண்ணூற்று ஆறு சதம் (ரூ55,78,000.96) அத்துடன் நாற்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எண்ணூற்று அறுபது ரூபா

எழுபத்தேழு சதத்தில் (ரூ. 49,97,860.77) ஆண்டுக்கு பதினெட்டு (18%) வீதத்தில் 2008.12.01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட முறி இல. 658 மற்றும் 814 ஆகியவற்றின் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஐம்பத்தைந்து இலட்சத்து எழுபத்தெட்டாயிரம் ரூபா தொண்ணூற்று ஆறு சதமும் (ரூ55,78,000.96) அத்துடன் 2008.12.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு கோவில் ரோட், குளியாபிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஜே. அல்பியஸ் பெரேராவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பேருவளை பிரதேச சபை எல்லைகளுள் களுத்துறை தொட்டமுனை தெற்கு பய்யாகல் மக்கொன் பத்தேயில் தூவேகொட மற்றும் ஹல்கந்தாவிலயில் அமைந்த 'லீவ்வெல்யன்ஸ் எஸ்டேட்' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஆர். குமாரகே தயாரித்த 2002.12.15 ஆந்திகதியிட்ட வரைபடம் இல. 1675 இல் விபரித்த துண்டு 5A என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் : துண்டுகள் 5B மற்றும் 5 C உம் ; கிழக்கில் : மக்கொனயிலிருந்து கிராமம் வரை ரோட்டும் ; தெற்கில் : வரைபடம் இல. 1182 இல் துண்டு 7 உம் ; மேற்கில் : டி. பி. 102964 உம் எல்லைகளாகக் கொண்டு பதின்மூன்று ஏக்கர் மூன்று றூட் சைபர் இரண்டு தசம் ஐந்து சைபர் பேர்சச்ஸ்கள் (13ஏ. 3றூ. 02.50பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது களுத்துறை மாவட்ட காணிப் பதிவகத்தில் H 252/ 150 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

திரு. எல். பி. ஜே. கொடிதுவக்கு,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பொலன்னறுவை புதிய நகரக் கிளை.

3-325

---

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2008.10.16 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப் பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது -

"1. பிரசித்த நொத்தாரிசு திரு. கே. எச். வீ. டி. விக்ரமரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003.02.07 ஆந் திகதிய இலக்கம் 568, பிரசித்த நொத்தாரிசு எல். எஸ். ஆத்தாவுத அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.03.06 ஆந் திகதிய இலக்கம் 5622 கொண்ட இரு முறிகளின் பேரில் இலக்கம் 147, யட்டிஹலகல, கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. பேலவ வட்டகொட கெதர தம்மிக்க கீத்தசர இராஜபக்ஸ திருமதி அம்பிற்றியே இராஜபக்ஸகே கல்யானவதி இராஜபக்ஷ என்பவர்களினால் முதலும் 2007.07.18 வரையிலான வட்டியுமாக ஆறு இலட்சத்து அறுபத்தையாயிரத்து அறுநூற்று பன்னிரண்டு ரூபா முப்பத்தைந்து சதமும் (ரூ. 6,65,612.35) அத்துடன் ஆறு இலட்சத்து இருபத்து நான்காயிரம் ரூபாவிற்கு (ரூ. 6,24,000) 2007.07.19 ஆந் திகதி தொடக்கம் முழுப் பணமும் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு பதினெட்டு (18%) வீதத்திலான வட்டியும் இலங்கை வங்கிக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் செலுத்த வேண்டியுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட 2003.02.07 ஆந் திகதிய இலக்கம் 568, 2007.03.06 ஆந் திகதிய இலக்கம் 5622 கொண்ட இரு முறிகளின் மேல் வருமதியாகவுள்ள ஆறு இலட்சத்து அறுபத்தையாயிரத்து அறுநூற்று பன்னிரண்டு ரூபா முப்பத்தைந்து சதமும் (ரூ. 6,65,612.35) 2007.07.19 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பட்டவாறு வடடியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 24, டொறிங்டன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர்கள் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்குமிணங்க இத்தால் அனுமதியும் அதிகரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹாரிஸ்பத்து, களுகம்மனசியபத்து, உடகம, யட்டிஹலகலவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் அசோக்க விஜேகோன் அவர்களால் தயாரிக்கப்படட 2000, மே 13 ஆந் திகதிய 916 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 11 எனக் காட்டப்பட்டுள்ள, அத்லாகே வத்த, கெதர வத்த, மெத்தேகொட, உடஹவத்த என்றழைக்கப்பட்ட காணிகளின் ஒரு பாகமாகிய, தற்பொழுது "(G) கல்பேலே கெதர வத்த" என்றழைக்கப்படும் ஒரே ஆதனத்தினாலான வடகிழக்கில் : நந்தசிறிக்கு சொந்தமான தம்பலகொல்லே ஹேனவும்; தென்கிழக்கில்: சீலவதிக்கும் மற்றையோர்க்கும் சொந்தமான தல்லந்த வத்தவும் ; தென்மேற்கில் : 12 ஆந் துண்டும் ; வடமேற்கில் : 7 ஆம் துண்டும் எல்லைகளாகக் கொண்ட, ஒரு றூட் நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 4பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணி முழுவதும் அதற்குள் அமைந்துள்ள அனைத்துமாகும். இது கண்டி காணிப் பதிவகத்தில் H707/79 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்டவாறு உடகம யட்டிஹலகலவில் அமைந்துள்ள, மேற்கூறிய 916 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 12 எனக் காட்டப்பட்டுள்ள, அத்லாகே வத்த, கெதர வத்த, மெத்தேகொட, உடஹவத்த என்றழைக்கப்பட்ட காணிகளின் ஒரு பாகமாகிய, தற்பொழுது "(G) கல்பேலே கெதர வத்த" என்றழைக்கப்படும் ஒரே ஆதனத்தினாலான வடகிழக்கில் : துண்டு 7 உம் 11 உம் ; தென்கிழக்கில் : சீலவதிக்கும் மற்றையோர்க்கும் சொந்தமான தல்லந்த வத்தயும், அகழியும்; தென்மேற்கில்: (B) பறிகம- கண்டி பிரதான வீதியும்

; வடமேற்கில் : 5 ஆம் துண்டும் எல்லைகளாகக் கொண்ட இருபத்தெட்டு தசம் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 28.6பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்யணிக்கப்பட்டுள்ள காணி முழுவதும் அதற்குள் அமைந்துள்ள அனைத்துமாகும். இது கண்டி காணிப் பதிகவத்தில H707/80 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. . மேற்குறிப்பிட்டவாறு உடகம யட்டிஹலகலவில் அமைந்துள்ள, மேற்கூறிய 916 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 13 எனக் காட்டப்பட்டுள்ள, அத்லாகே வத்த, கெதர வத்த, மெத்தேகொட, உடஹவத்த என்றழைக்கப்பட்ட காணிகளின் ஒரு பாகமாகிய, தற்பொழுது "(G) கல்பேலே கெதர வத்த" என்றழைக்கப்படும் ஒரே ஆதனத்தினாலான வடகிழக்கில் : (B) பறிகம- கண்டி பிரதான வீதியும் ; தென்கிழக்கில்: சீலவதிக்கும் மற்றையோருக்கும் சொந்தமான தல்லந்த வத்தயும் ; தென்மேற்கில் : அகழியும் வடமேற்கில் : 4 ஆம் துண்டும் எல்லைகளாகக் கொண்ட பூச்சியம் தசம் எட்டு ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 0.86பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்யணிக்கப்பட்டுள்ள காணி முழுவதும் அதற்குள் அமைந்துள்ள அனைத்துமாகும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

திரு. ஏ. ஜீ. (B) போகஸ்வத்த,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பேராதனை கிளை.

3-326

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2008.12.18 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது -

"1. பிரசித்த நொத்தாரிசு திரு. பி. அலுத்வத்த அத்தாட்சிப்படுத்திய 2001.12.18 ஆந் திகதியிட்ட முறி இல. 1734 இன் பேரில் றுவன்புர, உடமுல்ல என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. தலபிட்டியகே கெதர கருணாரத்ன என்பவரிடமிருந்து முதலும் 2008.09.10 வரை வட்டியும் நான்கு இலட்சத்து நாற்பதாயிரத்து நூற்று எழுபது ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 4,40,170.61) அத்துடன் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்று ஐந்து ரூபாவில் (ரூ. 2,40,805) ஆண்டுக்கு இருபத்தெட்டு (28%) வீதத்தில் 2008.09.10 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. பிரசித்த நொத்தாரிசு திரு. பி. அலுத்வத்த அத்தாட்சிப்படுத்திய 2001.12.18 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட முறி இல. 1734 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட நான்கு இலட்சத்து நாற்பதாயிரத்து நூற்று எழுபது ரூபா அறுபத்தொரு சதமும் (ரூ. 4,40,170.61) அத்துடன் 2008.09.10 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 24, டொறிங்டன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர்கள் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மாவனெல்ல கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

சபரகமுவ மாகாணம். கேகாலை மாவட்டம், கல்பொட கோரளை கன்னவாய பற்றுவில் மாவனெல்லை பிரதேச சபை எல்லைகளுள் ஹீனட்டிபத கிராமத்தில் கனேதென்ன ஹீனட்டிபத (வீ. சி. ரோட்) நெடுகவும் அமைந்த 'மீகனுமதஹேன' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. டி. சிறிசூரிய தயாரித்த 1995.01.07 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இல. 563 இல் விபரித்த துண்டு இல. 02 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: கனேதென்னயிலிருந்து ஹீனட்டிபத வரை வீ. சீ. ரோட்டும் ; கிழக்கில் : தாம்பு எலயும் ; தெற்கில் : கடதெஸ்ஸ ஓயாவும் ; மேற்கில் : ஏ. ஜீ. பீலிஸ் என்பவரின் மீகனுமதஹேனயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 563 இன் படி பத்தொன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 19பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது கேகாலை காணிப் பதிவகத்தில் C661./174 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

என். எம். ரத்னாயக்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மாவனெல்லை.

3-324

---

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் 2008, ஒற்றோபர் 30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"நுகேகொடை, தேவாலய வீதி, தலபத்பிட்டிய, 293/22 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஜயதுங்ககே ஹென்றி பெரேரா கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. பி. ஆர். ரணசிங்க

அத்தாட்சிப்படுத்திய 2004, மார்ச் 3 ஆந் திகதி கொண்ட 3729 ஆம் இலக்க ஈட்டுமுறி, 2004, யூலை 20 ஆந் திகதி கொண்ட 3920 ஆம் இலக்க ஈட்டுமுறி, 2006, ஒற்றோபர் 26 ஆந் திகதி கொண்ட 5590 ஆம் இலக்க ஈட்டுமுறி என்பன மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 02, யூனியன் பிளேஸ் 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் சார்பில் ஜயதுங்ககே ஹென்றி பெரேரா, ஜயதுங்ககே ருவன் கோசல பெரேரா ஆகியோரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளனர். ஆதலாலும் சொல்லப்பட்ட ஜயதுங்ககே ஹென்றி பெரேரா, ஜயதுங்ககே ருவண் கோசல பெரேரா ஆகியோர் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலாலும்,

முப்பது இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எண்ணூற்று ஏழு ரூபா தொண்ணூற்று ஒரு சதம் (ரூ. 30,72,807.91) தவணைக் கடன் வசதியின் மீது 2008.10.05 ஆந் திகதியன்றுள்ளவாறு நிலுவையிலிருக்கும் முதல் இருபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து அறுநூற்று ஐம்பத்தெட்டு ரூபா தொண்ணூற்று எட்டு சதத்தின் மீது (ரூ. 28,51,658.98) 2008.10.06 முதல் விற்பனைத் திகதி வரை உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறு மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் கொழும்பு ட்ரையட் ஆக்ஷனியர்ஸ் திரு. என். டீ. டீ. பி. சேனநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளை, பள்ளே பற்ற மஹாரகம பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட (முன்னர் கோட்டே- கல்கிசை) தலபத்பிட்டிய தேவாலய வீதியில் அமைந்துள்ளதும் தேவாலய வீதி, 293/22 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் ''கெற்றகெலகஹாவத்த'' என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எல். என். பெரேரா தயாரித்த 1998, திசெம்பர் 26 ஆந் திகதிகொண்ட 863 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 09 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் முழுவதும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 09 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : வீதி (தனியார்) ; கிழக்கில் : ஹேரத் முதியான்சேலாகே விமலரத்ன உரிமைகோரும் காணி, மற்றும் நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை காணி; தெற்கில் : ஹேரத் முதியான்சேலாகே விமலரத்ன உரிமைகோரும் காணி, மற்றும் நீர் வழங்கல். வடிகாலமைப்புச் சபைக் காணி ; மேற்கில் : 89C இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 8 என்பன அமைந்துள்ளன. 863 ஆம் இலக்க வடைபடததின்படி இதன் பரப்பளவு இருபத்திரண்டு தசம் நாலு சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 22.40பே.) அல்லது 0.0566 ஹெக்டேயர். 863 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் தனியார் வீதியின் மீதான வழியுரிமையுடன் சேர்த்து. இது கல்கிசை காணிப்பதிவகத்தில் M 3002/17 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

3-339

---

### பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பம்பலப்பிட்டி கிளை) - வாடிக்கையாளரின் பெயர் : தொன் சிந்தக புள்ளேபெரும

2008.12.17 ஆந் திகதி நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீயின் பணிப்பாளர்கள் கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது :-

''தொன் சிந்தக புள்ளேபெரும, முன்னர் வரையறுக்கப்பட்ட பான் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட பதிவு இல. பீகியு 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு வீ. டீ. பொன்சேக்கா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2008, மாச்சு 05 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 352 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாராதலாலும் ; பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ (இதனகத்துக்ப் பின்னர் சிலவேளைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும்) க்கு பணமுதல் கணக்கின் மீது பதின்மூன்று இலட்சத்து பதினையாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பது ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 13,15,249.49) கொண்ட தொகை மற்றும் 2008.10.31 ஆந் திகதி வரையான வட்டி அத்துடன் பன்னிரண்டு இலட்சத்து எண்ணாயிரத்து எழுநூற்று ஐம்பத்து மூன்று ரூபா அறுபத்து மூன்று சதம் (ரூ. 12,08,753.63) கொண்ட தொகை மீது 2008.11.01 ஆந் திகதியிலிருந்து சொல்லப்பட்ட முறியின் கொடுப்பனவு திகதி வரை ஆண்டிற்கு 29% வட்டியுடனும் சேர்த்து தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இல. 352 இன் மீது வரவேண்டியுள்ள சொல்லப்பட்ட தொகை பதின்மூன்று இலட்சத்து பதினையாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பது ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 13,15,249.49) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் 2008.11.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள

அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள, வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரகாரம் கோட்டே, பெத்தகான வீதி, இல. 134 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அதிகாரமும் அளிக்கப்படுகிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தற்போது கெஸ்பேவ பிரதேச சபை எல்லைகளுக்குள், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, ஹல்பிட்டியவில் அமைந்துள்ளதும் 'பத்தலவத்த' என்ற "தெல்கஹகானத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். லால் குணசேக்கர அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990.09.02 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3471 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. இதன் எல்லைகளாவன - வடக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 3 (2 அடி அகல வீதி) ; கிழக்கு : வீதி ; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 1 ; மேற்கு: சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 1. இது சொல்லப்பட்ட வரைபடம் இல. 3471 இற்கமைய இருபது தசம் சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20.0பே.) விஸ்தீரணமுடையது; கல்கிஸ்ஸ காணி பதிவகத்தில் தலைப்பு எம் 1802/182 இன் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 3471 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 3 இன் வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரஞ்சித் பெரேரா,
சிரேஷ்ட முகாமையாளர் - அறவிடுதல்கள்.

3-340/8

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.